## மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை

**O.S. No. 210/2021**

**வா.சா.1 ராஜேந்திரன்** **10.09.2024**

**குறுக்கு விசாரணை :– (1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில்)**

நான் கோபாலகிருஸ்ணன், ராஜாராம், அறிவழகன், பெரியணன் ஆகியோர் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் பாகப்பிரிவினை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். கே.கே.பள்ளம் ஊரில் 26 சர்வே எண்களுக்கும் கல்லுசேரி கிராமத்தில் 9 சர்வே எண்களுக்கும் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். பொன்னழகு கோனார் எனது தாத்தா. பொன்னழகு கோனாருக்கு சுமார் 15 ஏக்கர் நிலம் சொந்தமாக இருந்தது. எனது அப்பா கிருஸ்ணன், எனது பெரியகருப்பன், எனது சித்தப்பா அழகு கோனார் ஆகியோர் பாகம் பிரித்ததற்கு ஆவணம் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை. தற்போதும் எனது தாத்தா பொன்னழகு கோனார் பெயரில் கே.கே.பள்ளம் மற்றும் மேலப்பிடாவூர் குரூப் கல்லுசேரி கிராமத்தில் சில சொத்துக்கள் உள்ளது என்றால் இருக்கலாம் எனக்கு அது பற்றி தெரியாது. தாவா சொத்துக்களை தவிர வேறு சொத்துக்களுக்கு எனது அப்பா, எனது சித்தப்பா, எனது பெரியப்பா பெயரில் தற்போதும் கூட்டுப்பட்டா உள்ளது என்றால் இருக்கலாம், அந்த சொத்துக்களை இந்த வழக்கில் நான் சேர்க்கவில்லை. அந்த சொத்துக்களை ஏன் வழக்கில் சேர்க்கவில்லை என்றால் 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு இனாம் செட்டில்மெண்ட் பத்திரம் போட்ட சொத்துக்களை மட்டும் சேர்த்துள்ளோம். எனது அம்மா இருளாயி பெயரில் சொத்துக்கள் இல்லை.

வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
**மானாமதுரை**